**பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் துவக்கல் ஆணை**

**நாகப்பட்டினம், அரசு மருத்துவக் கல்லூரி , முதல்வர் அவர்களின் செயல்முறை ஆணை**

**முன்னிலை:மரு.ஆர்.சரோஜினி, MD.,**

செ.மு.ஆ.எண்:1318/நி2/2024 நாள்: 17.02.2025

பொருள்: பணியாளர் - தமிழ்நாடு சார்நிலைப் பணி - தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் சிறப்பு விதி 3(g) அடிப்படையில் பதவி உயர்வில் பணி அமர்வு - **திரு.ரெ.அன்பழகன்,** இளநிலை உதவியாளர், அரசு மருத்துவக்கல்லூரி, நாகப்பட்டினம்- பணிவரன் முறை மற்றும் தகுதிகாண் பருவம் துவக்குதல் - ஆணையிடுதல்.

பார்வை:
1. இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம், சென்னை–6,அவர்களின் ந.க.எண்:26952/நி2/2/2023, நாள்:15.03.2024.
2. இயக்குநர், மருத்துவக்கல்வி (ம) ஆராய்ச்சி இயக்ககம், சென்னை-10, அவர்களின் ந.க.எண்:53369/நி2/5/2023-2, நாள்:15.03.2024.
3. முதல்வர், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, நாகப்பட்டினம் அவர்களின் ந.க எண்:1811/நி2/2023, நாள்:18.03.2024
4. முதல்வர், அரசு மருத்துவக் கல்லூரி, நாகப்பட்டினம் அவர்களின் பணி நியமனஆணை எண்:1318/நி2/2024,நாள்:19.03.2024

********

**ஆணை:**

பார்வை (1) மற்றும் (2)-ல் கண்டுள்ள இயக்குநரக ஆணையின்படி நாகப்பட்டினம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பதிவுரு எழுத்தராகப் பணிபுரிந்து 3(g) அடிப்படையில் பதவி உயர்வில், பார்வை (4)-ல் காணும் கடிதத்தின் படி நாகப்பட்டினம் அரசு மருத்துவக் கல்லூரியில் இளநிலை உதவியாளராக பணியமர்வு செய்யப்பட்ட **திரு.ரெ.அன்பழகன்** அவர்களின் கல்வித் தகுதி மற்றும் பணி அமர்வு தொடர்பான பிற சான்றுகளின் உண்மைத்தன்மை மற்றும் உடற்தகுதிச் சான்றிதழ் சரிபார்க்கப்பட்டு உறுதி செய்யப்பட்டதின் அடிப்படையில், தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம்-2016-ன் படி, தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் **19.03.2024 முற்பகல்** முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பத்தி 1-ல் ஆணையிடப்பட்ட பணிவரன்முறையினை தொடர்ந்து **திரு.ரெ.அன்பழகன்** அவர்களுக்கு **19.03.2024** முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணையிடப்படுகிறது.

மேற்படி **திரு.ரெ.அன்பழகன்** அவர்கள் 19.03.2024 முற்பகல் முதல் மூன்றாண்டு தொடர்பணிக்காலத்தில் ஈராண்டு காலத்தில் தகுதிகாண் பருவம் முடிக்க வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

(த.பி.பா)

தகுதிகாண் பருவக் காலத்தில் மேற்படி தனியர், கீழே குறிப்பிட்ட தேர்வுகள்/பயிற்சிகளில் தேர்ச்சி பெற வேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது.

1. தமிழ்நாடு மருத்துவக் குறியீடு (TN Medical Code)
2. பவானிசாகர் அடிப்படை பயிற்சி (Bhavanisagar Training).

மேற்கண்ட பணிவரன்முறை ஆணையானது, சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில், நிலுவையில் உள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய Group IV தேர்வு தொடர்பான வழக்குகளின் தீர்ப்பாணைக்கு உட்பட்டதாகும்.

முதல்வர்
அரசு மருத்துவக்கல்லூரி
நாகப்பட்டினம்.

பெறுநர்
திரு.ரெ.அன்பழகன்,
இளநிலை உதவியாளர்,
அரசு மருத்துவக் கல்லூரி, நாகப்பட்டினம்- உரிய வழியாக.

நகல்
பணிப்பதிவேட்டிற்கு - 1

நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது
1. இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம், சென்னை – 6.
2. இயக்குநர், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம், கீழ்ப்பாக்கம், சென்னை-10.
உதிரி - 1